# EASTERN UNIVERSITY, SRI LANKA
## Faculty of Commerce and Management
## External Degree
## Part III ($4^{TH}$ Year ) Examination in Bachelor of Business Administration
## 2010/2011 (August/September/October - 2015) (Proper/Repeat)

12 OCT 2015

## EXB 404 – Operations Management

**Answer all questions** **Time: 03 Hours**

Q1) a) "உற்பத்தி நிறுவனங்கள் இலாபம் உழைத்தலை மட்டும் நோக்காக கொள்ளாது சமூகத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டு சில சமூகப்பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது."

இக்கூற்றின் அடிப்படையில் உற்பத்தி முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய சமூகப்பொறுப்புக்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள் )

b) உற்பத்தி நிறுவனங்கள் தற்கால போட்டி சந்தையில் தமது சந்தைப்பங்கினை தக்கவைத்துக்கொள்ளுவதற்கும் விருத்திசெய்து கொள்ளுவதற்குமாக தமது உற்பத்தி பொருளிலும் உற்பத்தி செய்முறையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த உற்பத்தி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பிரதான ஆராய்ச்சி வகைகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள் )

c) மிக வேகமாக மாறி வருகின்ற மனித தேவை விருப்பங்களுக்கேற்ப புதிய பொருட்களை உற்பத்தி செய்து வழங்குவதற்கு பின்பற்றப்படுகின்ற பொருள் விருத்தி செய்முறையினை விளக்குக.

(08 புள்ளிகள் )

(மொத்தம் 20 புள்ளிகள் )

Q2 a) பொருளொன்று வடிவமைப்புச் செய்யப்படுகின்றபோது நியமமாக்கல் எண்ணக்கருவின் பங்களிப்பினை விளக்குக.

(06 புள்ளிகள் )

b) தொழிற்சாலை ஒன்றினை நிறுவுகின்ற போது பொருத்தமான இடம் தெரிவுசெய்யப்படுதல் அவசியமாகும் உற்பத்தி நிறுவனங்கள் வினைத்திறனையும் விளைதிறனையும் அடைந்துகொள்ளும் வகையில் தொழிற்சாலைக்கான அமைவிடத்தினை தெரிவுசெய்கின்றபோது கவனத்திற்கொள்ளவேண்டிய பிரதான காரணிகளை அடையாளம் கண்டு விளக்குக.

(08 புள்ளிகள் )

c) ஒரு நிறுவனம் கட்டிடங்களை நன்கு திட்டமிட்டு அமைப்பதால் பெறப்பட்க்கூடிய பயன்களை விளக்குக.

( 06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள் )

Q3 a) உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திப் பயன்பாட்டிற்காக இயந்திரங்களை பயன்படுத்துவது அவசியமாகின்றது. இதனடிப்படையில் உற்பத்தி நிறுவனங்களில் பொறித் தெரிவுக்கான காரணங்களை சுருக்கமாக விளக்குக.

( 05 புள்ளிகள்)

b) உற்பத்தி நிறுவனங்களின் பொறித்தெரிவில் தொழில்நூட்பப்பகுப்பாய்வின் பங்களிப்பினை விளக்குக.

( 10 புள்ளிகள்)

c) ஊற்பத்தி நிறுவனங்கள் வேலைப்படிப்பினை பின்பற்றுகின்றபோது அடைந்து கொள்ளக்கூடிய பயன்களை விளக்குக.

( 05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள் )

Q4 a) பொறியமைத்தல் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி, சிறந்த பொறியமைத்தல் கொண்டிருக்கவேண்டிய பண்புகளை சுருக்கமாக விளக்குக.

( 06 புள்ளிகள்)

b) உற்பத்தி நிறுவனங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் கொள்கைகளில் பராமரிப்புக்கொள்கையும் ஒன்றாகும். உற்பத்தி நிறுவனங்கள் நீண்டகால பயன்பாட்டுக்குரிய சொத்துக்களை நல்ல நிலையில் வைத்திருப்பதற்காக பராமரிப்புச் செயற்பாட்டில் முக்கிய கவனம் செலுத்தகின்றன. உற்பத்தி நிறுவனங்களின் பராமரிப்புச் செயற்பாட்டில் ABC பகுப்பாய்வின் பங்களிப்பினை விளக்குக.

(06 புள்ளிகள் )

c) உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்திப் பொருட்களின் பெறுமதியில் சுமார் 65% கூடுதலாக மூலப் பொருள் பெறுமதி கொண்டிருப்பதால் மூலப் பொருள் கொள்வனவு சரியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இக்கூற்றின் அடிப்படையில் கொள்வனவுத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள் )

(மொத்தம் 20 புள்ளிகள் )

Q5.

(a) ஓர் நிறுவனத்தின் இருப்பு கொள்வனவு சம்மந்தமான தகவல்கள் பின்வருமாறு.

கேள்வி = ஆண்டிற்கு 200,000 அலகுகள்

கட்டளைச் செலவு = கட்டளை ஒன்றுக்கு ரூபா 200/-

பராமரிப்பச் செலவு அலகு விலையயில் 20%

அடிப்படை அலகு விலை ரூபா 1,000

விற்பனை நிறுவனத்தினால் பின்வரும் விலைக்கழிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

| கட்டளைத் தொகை (அலகுகள்) | விலைக்கழிவு |
|---|---|
| 40,000-79,999 | அடிப்படை அலகு விலையில் 2% |
| 80,000-159,999 | அடிப்படை அலகு விலையில் 4% |
| 160,000 அலகுகளும் அதற்கு மேலாகவும் | அடிப்படை அலகு விலையில் 5% |

உங்களிடமிருந்து வேண்டப்படுவது

கொள்வனவுச் செலவினை குறைக்கக்கூடிய மிகப் பொருத்தமான சிக்கனக் கட்டளைத் தொகையினை கணிப்பிடுக.

(15 புள்ளிகள் )

(b) மேற்குறிப்பிடப்பட்ட ரூபா 1,000 அலகு விலையில் 750 அலகுகள் கட்டளைத்தொகையாக எழுமாற்றாக தெரிவுசெய்யப்பட்டால் அதன் மொத்தச்செலவில் ஏற்படக்கூடிய தாக்கத்தின் உணர்திறனை கணிப்பிடுக.

(05 புள்ளிகள் )

(மொத்தம் 20 புள்ளிகள் )